AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 9

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை வெளிவரும் ஜனவரி 1முதல் 15வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## உறவனை உயர்த்தும் உன்னதக் கோவில்

- ★ நட்சத்திரக் கோவில் வழிபாடு
- ★ கோபாலசித்தர் – சிஞ்சுவாடி
- ★ எளிய சனி பரிகாரங்கள்
- ★ நரசிம்மருக்கும் பிரதோஷ பூஜை !

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 95660 00134, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



நம் இந்தியத்திருநாட்டில் "இல்லாதவர்கள் எனப்படுகின்ற ஏழைகள் அதிகம் உள்ளனர். இந்த நிலையை மாற்றவே ஒரு மந்திரத்தை விஸ்வாமித்திரர் அருளியிருக்கிறார். மன்னனாய் இருந்து ரிஷியாய் மாறிய  விஸ்வாமித்திரர் மக்களின் வறுமையைப் போக்கும் ஓர் எளிய மந்திரத்தை எமக்கு அருளினார். அதுவே ஸ்ரீம் பிரிஸி Shreem Brzee என்னும் மந்திரம். இந்த மந்திரத்தை தொடர்ந்து உச்சரிப்பதன் மூலம் தரித்திரம் நீங்கி, செல்வ வளம் பெருகும்.

~ Dr. Baskaran Pillai

இனிய சத்வித்யா நேயர்களே!
இந்தத் தலைமுறைக்கும் வருகின்ற தலைமுறைக்கும் நமது ஆன்மீக சிந்தனைகளையும் வேத, ஜோதிட நுணுக்கங்களையும் நினைவூட்டும் வகையில் நமது இதழ் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கிறது.




துயரங்கள், தொல்லைகள் அனைத்திலிருந்தும் சற்றே விடுபட்டு நிம்மதியான மனதுடன் 2021ம் ஆண்டில் புத்துணர்ச்சியோடு அடியெடுத்து வைக்கின்றோம், இதுவரை இருந்த இன்னல்கள் மாறி இன்பங்கள் விளைந்திட இறைவனை வேண்டுவோம்.

பொங்கல் விழாவை புதுமையாகக் கொண்டாடுவோம், கோள்களின் சேர்க்கையால் வானம் கசிந்துருகி வேளாண்மை செழிக்கட்டும், கண்ணுக்குத் தெரியா நுண்கிருமியின் ஆட்டம் முடிந்து, கண்ணுக்கு அழகான காட்சிகள் விரியட்டும் புன்மைகள் எரியட்டும் பூக்கள் மலரட்டும் புன்னகை தெறிக்கட்டும்.

சத்வித்யா
வாழ்த்துகின்றது

(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# சித்தர் பூமி

# கோபாலசித்தர் – சிஞ்சுவாடி

மனிதனாகப் பிறந்து, மகானாய் மாறி, சித்தர்களாய் ஜீவசமாதி அடைஞ்ச பல ஞானிகளப்பத்தி இந்தப் பகுதியில நாம பார்த்துகிட்டு வரோம்.

மனிதன் எப்படி மகானாய் மறு அவதாரம் எடுக்க முடியும்? அதற்கு இறையருள் வேண்டுமல்லவா? இப்படி நடப்பது எல்லாமே இறையருள் தான் ஆனால், இறைவனே சில நேரங்களில் மனிதப் பிறவியாய் அவதரித்து, தன்னை வெளிப்படுத்திக் கொள்வதும் உண்டு.



இப்படி எல்லாம் நடப்பதால்தான் நம்நாடு புண்ணிய பூமி என்னும் பெருமையை பெற்றுள்ளது. இப்ப நாம பார்க்கவிருக்கும் சித்தர். மகானா? புகழ்பெற்ற சித்தரின் மறுபிறவியா? அல்லது கடவுளின் அவதாரமா? என்னும் கேள்வி நம்முள் எழுகிறது.

கொஞ்சி விளையாடும் இயற்கை அன்னை குதூகலமாய் ஆர்ப்பரிக்கும் கொங்கு தேசத்தில் தென்னை தலைவிரித்தாடும் பொள்ளாச்சி என்னும் புண்ணிய பூமி! இதனருகே இருக்கும் எழில்மிகு கிராமம் தான் "சிஞ்சுவாடி!"

இந்த பகுதியிலேயே சற்று மேடாய் அமைந்திருக்கும் ஊர் இது. இந்த நிலப்பகுதி மட்டும் சற்றே உயர்ந்திருப்பதன் காரணம் என்ன? இதுவும் இறையருள் தான்! அது, என்ன என்பதனை பின்னர் பார்ப்போம்.

இந்த சிஞ்சுவாடியில் ஜீவசமாதி அடைஞ்சிருக்கற மகான் தான் கோபால சித்தர், ஏதோ சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவர் இல்லை தற்போது ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து ஜீவசமாதி அடைந்தவர். இந்தப்பகுதி மக்கள் இவரை வணங்கி, இவரோடு உரையாடி, இவரது அருளைப் பெற்று, தங்கள் வாழ்வின் துன்பங்கள் நீங்கி, நல்வாழ்வு பெற்றுள்ளனர்.
கோபால சித்தருடைய ஆற்றலையும் சக்தியையும் கண் கூடாகப் பார்த்து, உணர்ந்த மக்கள், இவரை மகாவிஷ்ணுவின் மறு அவதாரம் என்றே போற்றிப் புகழ்பாடுகின்றனர். அந்த அளவுக்கு இவருக்கு அமைந்த இயற்பெயர் போலவே, இவரது மகிமைகள் எல்லாம் அந்த காக்கும் கடவுளான கோபாலன்

செயலை ஒத்ததாகவே இருந்துள்ளன.

மகான்களுக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் என்பார்கள், அதுபோல, கோபால சித்தர் அவர்கள் ஞான திருஷ்டியில் கண்டுணர்ந்து சொன்ன சொற்கள் அனைத்தும் அவ்வண்ணமே நடந்ததைக் கண்டு, மக்கள் வியப்பெய்திய சம்பவங்கள் இங்கே ஏராளமாக நடந்துள்ளன.

கோபால சித்தரோட தாயார் பெயர், ஆதிசங்கரர் அருளிய சௌந்தர்ய லஹரியில் வந்திருக்கிற தகவலையும் நமக்கு சொன்னவங்க அதோட, கடவுளின் மைந்தன்னு சொல்லப்பட்ட யோகி ராம்சுரத்குமார், தன்னோட சீடரான எழுத்தாளர் பாலகுமாரன்கிட்ட, "தென்னாட்டுல மகா விஷ்ணு அவதாரம் எடுத்திருக்கிறார்னு கோபால சித்தரப்பத்தி சொல்லியிருக்கிறாராம்.

இந்த ஜீவசமாதிய பராமாக்கும் பணியில ஈடுபட்டிருக்கிற கல்யாணி அம்மா சொன்ன தகவல்கள் ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம் அதாவது, இவர்கிட்ட சுவாமிகள், நிறைய சூட்சம வார்த்தைகள் சொன்னதாகவும் சுவாமிகள் ஜீவசமாதி அடைந்ததற்குப் பிறகுதான் அந்த வார்த்தைகளுக்கான அர்த்தம் விளங்கி வருவதாகவும் சொன்னார், அவை எல்லாமே தேவ ரகசியம், அவற்றை வெளியிடக் கூடாது என்றும் தெரிவித்தார்.

அப்படி ஒரு முக்கியமான தகவல் கோபால சித்தர் வாயில் இருந்து வந்துள்ளது, அவர் சொன்னாராம் அதாவது, பிரளய காலத்துக்குப் பிறகு இந்த மேட்டுப்பாங்கான இடம், ஸ்ரீரங்கம் என்னும் தலத்தைப் போலவே ஏழு சுற்று மதில்களோடு மிக பிரசித்தி பெற்று, வையகத்தோர் வணங்கும் புண்ணிய தலமாக திகழும் என்று கூறியுள்ளார்.

கோபால சித்தரின் கட்டளைக்கிணங்கி, 1997ம் ஆண்டு முதல் ஜீவசமாதி வளாகத்திலேயே தங்கி, பணிவிடைகள் செய்துவரும் கல்யாணி அம்மாள் மேலும் ஒரு தகவலை சொன்னார், அது.. "கோபால சித்தர் வேறு யாருமல்ல, காக புஜண்டரின் மறு அவதாரம்"

கோபால சித்தர் கூறிய எத்தனையோ கருத்துகள் காக புஜண்டரின் நூலில் இருந்ததை பின்னாளில் கண்டு உணர்ந்துள்ளனர். இதெல்லாம் உண்மை என்று நிரூபணம் ஆகும் வகையில், இந்த ஜீவசமாதியில் பூஜைகள் நடைபெறும் வேளைகளில் பல நூறு காகங்கள் இங்கே வந்து, கரைந்து கொண்டிருக்கும் அதிசயமும் இங்கே இன்றளவும் நடந்து கொண்டிருக்கிறது.

இந்த ஜீவசமாதியையொட்டி, ஒரு பெருமாள் கோவில் உள்ளது, சிதில மடைந்திருக்கும் இந்த ஆலயத்தை நாடி, மொழியறியாத வடநாட்டு பக்தர்கள் பலர் வந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் அனைவருமே ஜீவ நாடியில் இந்த கோயிலைப் பற்றியும் கோபால சித்தரைப் பற்றியும் தெளிவாகக் கூறுவதை கவனித்தால் கோபால சித்தரின் தெய்வநிலையை நன்கு உணர முடியும்.

இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் பலர், சித்தர் வாழ்ந்த காலத்தில் அவருடைய ஆசியைப் பெற்று நோய்கள் நீங்கி, நல்வாழ்வு பெற்றதைக் கூறுகின்றனர் அதேபோல, அந்த மகான் ஐக்கியமான இந்த ஜீவசமாதியில் இப்போது வந்து வேண்டுவோரின் குறைகளும் நீங்கப் பெறுகிறது. சுற்றுலாப் பயணிகள்

போல பலரும் வந்து வழிபட்டு செல்கின்றனர். பொள்ளாச்சி பகுதிக்கு படப்பிடிப்புக்காக வருகின்ற திரைப்பட நடிகர்கள் மற்றும் கலைஞர்கள் கோபாலசாமி சித்தரின் மகிமையை உணர்ந்து, தொடர்ந்து வணங்கி வருகின்றனர். கோபால சித்தர் என்னும் மகானின் ஜீவசமாதி, சகல துன்பங்களையும் போக்க வல்லதாய் அருள்பாலிக்கிறது.

~ ரா. பன்னீர்செல்வம்

# உழவனை உயர்த்தும் உன்னதக் கோயில்

பசுமை படர்ந்த பூமியை மருதம் என்பது இலக்கியம் வயலும், வயல் சூழ்ந்த பகுதியை மருதம்... மணிவாசகர் பெருமான் அருளிய திருப்பள்ளி எழுச்சியில் தண்வயல் சூழ் திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் குறித்து அழகாக எடுத்துரைக்கின்றார்

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலை அடுத்த சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோயில் பசுமை கொஞ்சும் குறிஞ்சி, மருதம் கை கோர்த்த எழிலார்ந்த பசுமை சூழ்ந்த பகுதியில் மும்மூர்த்தி வடிவில் ஓர் மூர்த்தியாக சர்வேஸ்வரனாக அருள் பாலிக்கின்றார்



கடலூர் மாவட்டம் சிதம்பரம் சாலையில் மேட்டுப் பாளையத்தில் இருந்து 6கிலோ மீட்டர் மேற்கே செல்லும் பாதையில் உழவனுக்காக அருள்பாலித்த திருவிளையாடல் நிகழ்ந்த தலம் ஒன்று அமைந்துள்ளது.

இத்தல ஈசனின் பெயர் அருள்மிகு சிவ கொழுந்தீசர் திருக்கோயில் அமைந்த பகுதி இனிய இயற்கை சூழலில் அமைந்து அழகுடன் அருட்காட்சி அளிக்கும் அற்புத திருத்தலம் இப்பகுதிக்கு திருத்தினை நகர் என்று திருமுறை பதிகங்களில் சொல்லப் பெறுகிறது தற்போது தீர்த்தன கிரி என்று அழைக்கப்படுகிறது.

பெரியாள் என்று பெயர் கொண்ட ஓர் அடியவருடைய நிலத்தில் அந்த அடியவருக்காக, அவரது நிலத்தில் இறைவன் சிவபெருமான் அடியவர் வடிவில் வந்து வயலில் தினை விளையுமாறு அருள் செய்த அதிசய தலம் இது.

தல இறைவனை சிவ கொழுந்தீசர், சிவாங்கரேஸ்வர் என்று பக்தியுடன் அழைக்கின்றனர்.

அம்பிகையின் அருட்பெயர் அருள்மிகு நீலாயதாட்சி, கருந்தடங் கண்ணி தல விருட்சம் -கொன்றை கொன்றை ஈசனுக்கு மிகவும் பிடித்த மலர். தல தீர்த்தம் - ஜாம்பவ தீர்த்தம் தன் அடியவருக்காக அருள் பாலித்த ஈசன் அருள்மிகு சிவக்கொழுந்தீசன். சிவலிங்க மூர்த்தியாக அருட் காட்சி அளிக்கின்றார் இராஜ கம்பீரத்தோடு இராஜ கோபுரம் அமைந்துள்ளது பழமை மாறாமல் அமைதியான சூழலில் எழிலுடன் அருட்காட்சி தருகிறது இத்திருத்தலம்.

இத்தல இறைவனை மனம், மொழி, மெய் ஒன்று பட மனமுருக வழிபட்டால் ஈசனின் மலர்க் கருணை உறுதியாக கிடைக்கும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

கூடுதல் சிறப்பு

சிறந்த இல்வாழ்க்கை அமைய இத்தல அம்பிகையை வழிபட்டால் போதும் இத்தலத்தை பக்தியுடன் வலம் வருவோம் நலம் யாவும் பெறுவோம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்



# மந்திர மகிமை "அதிகாரம் பெற"

அன்னையின் அழகைப் போற்றிப் புகழும் பாடல்கள் ஒவ்வொன்றும் மந்திரமாய்த் திகழும் சௌந்தர்ய லஹரியில் இப்போது நாம் பார்க்கவிருக்கும் பாடல், உயர்ந்த பதவியும் அதிகாரமும் பெற உதவும் மந்திரமாகும்.

**மந்திரம்**

த்ரயாணாம் தேவானாம் த்ரிகுண ஜநி தானாம் தவசிவே பவேத் பூஜா பூஜா தவ சரணயோர் - யா விரசிதா ததா ஹி த்வத் பாதோத்வஹன - மணிபீடஸ்ய நிகடே ஸ்திதா ஹ்யேதே சச்வன் - முகுலித - கரோத்தம்ஸ - மகுடா




**மந்திரத்தின் பொருள்**

சிவனின் இடப்பாகம் பெற்ற உமையவளே! நாங்கள் உனது திருவடிகளுக்கு செய்கின்ற பூஜை, உனக்கு மட்டுமே செய்யப்படுவதா என்ன? உன் முக்குணங்களைப் பிரதிபலிக்கும் மும்மூர்த்திகளுக்கும் செய்யப்படுவதாகுமே ஆமாம்! உன் தங்கப் பாதங்களைத் தாங்கும் ரத்தின ஆசனத்தின் அருகிலே மும்மூர்த்திகளும் தங்கள் திருக்கரங்களை கிரீடத்தின் மேல் உயர்த்தி உன்னை வணங்கிக் கொண்டுள்ளனரே எனவே, உனக்கு செய்யப்படும் பூஜை அந்த மும்மூர்த்திகளுக்கும் தானே?

**இந்த மந்திரத்தை பிரயோகிக்கும் முறை**

இந்த மந்திரத்திற்குரிய யந்திரத்தை, தங்கம் அல்லது தாமிரத்தகட்டில் எழுதிக்கொள்ள வேண்டும். இந்தத் தகட்டை பூஜையில் வைத்து, கிழக்கு முகமாக அமர்ந்து, தினமும் 1008 முறை, 45 நாட்கள் ஜபம் செய்ய வேண்டும். குங்குமத்தைக் கொண்டு "லலிதா த்ரிசதி" அர்ச்சனை செய்ய வேண்டும்.

அன்னம், தேன்கலந்தபால், நாட்டுச்சர்க்கரை பழங்கள் கொண்டு நைவேத்யம் செய்தல் நலம்!

இந்த மந்திரத்தை ஜெபித்து, பூஜை செய்வதனால் உயர்ந்த பதவியும் அதிகார பலமும் செல்வாக்கும் வந்து சேரும். இந்திரனைப் போல பெருவாழ்வு வாழ்வர்

~ ரா. பன்னீர்செல்வம்

# எளிய சனி பரிகாரங்கள்

## முற்பிறவி கர்மாவும் சனீஸ்வரனும்:

முற்பிறவியில் நாம் செய்த நல்ல மற்றும் தீய கர்ம பலன்களுக்கு தகுந்தாற்போன்று இந்த பிறவியை அமைத்து அந்த கர்ம பலன்களுக்கு தகுந்த சுக துக்கங்களை அனுபவிக்கச் செய்பவர் சனி பகவான் ஆகும். துன்பங்களை மட்டும் தருபவர் சனி என்ற கருத்து நம் மக்கள் மனதில் பதிந்துள்ளது. அந்த எண்ணம் தவறான கருத்தாகும்.

## திருமணமும் சனி பகவானும்:

திருமணத்தை நடத்திவைக்கும் கோள்களில் சனி பகவான் மிக முக்கிய பங்கு வகிக்கிறார். தொன்னூறு சதவிகித திருமணங்கள் நாம் பயப்படக் கூடிய ஏழரைச்சனி காலகட்டத்தில் தான் நடைபெறுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.



## சனி பகவான் கெடுக்கும் கோள் அல்ல கொடுக்கும் கோள்:

நாம் விரயசனி, ஜென்மசனி, பாதசனி, அர்த்தாஷ்டமசனி, ஏழரைச்சனி, அஷ்டமசனி போன்ற கோள்சார சனியின் நிலை பற்றி தேவையில்லாமல் கவலைப்படுகிறோம். அவ்வாறு கவலைப்படத் தேவையில்லை. சனி பகவான் கெடுக்கும் கோள் அல்ல மந்தன் என்பதால் நம் பூர்வஜென்ம தீய கர்மங்களை அனுபவிக்க வைத்து பின் நிச்சயமாக கொடுக்கும் கோள் சனி ஆகும்.

## எளிய சனி பரிகாரங்கள்:

1. சனி பகவானுக்கு உரிய தானியமான எள்ளை சிறிது எடுத்து வெள்ளிக்கிழமை இரவு ஒரு பொட்டலத்தில் மடித்து தலையணை அடியில் வைத்து உறங்கிவிட வேண்டும். சனிக்கிழமை அதிகாலை ஆறு மணிக்கு எழுந்தவுடன் குளித்து விட்டு பொட்டலத்தில் உள்ள எள்ளை சமைத்த சாதத்துடன் கலந்து தயிர் சேர்த்து பிசைந்து ஒரு கை அளவுள்ள உருண்டையாக பிசைந்து சனி ஹோரையில் காகத்திற்கு ஒன்பது சனிக்கிழமை வைத்து வரவேண்டும் பித்ரு சாபங்கள் விலகும்.
2. நன்றாக ஓடித்தேய்ந்த குதிரை லாடத்தை வரவேற்பு அறையில் "ரு" வை தலைகீழாக கவிழ்த்து வைதார் போன்று மாட்டிவைக்க வியாபாரம் பெருகும்.
3. கடுமையாக உழைக்கும் தொழிலாளர்களுக்கு சனிக்கிழமை தோறும் அன்னதானம் செய்துவர வேலையில்லாதவர்களுக்கு எளிதில் வேலை கிடைக்கும்.
4. தாய் மற்றும் தந்தை வயதை ஒத்த வயதானவர்களுக்கு வஸ்திரதானம் செய்தால் எல்லாவித சுக போகங்களும் கிடைக்கும்.
5. ஊனமுற்றவர்களுக்கு பொருள் தானம் செய்தால் கடன் சுமை குறையும்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# நட்சத்திரக் கோவில் வழிபாடு



ஒவ்வொருவருக்கும் பிறந்த நட்சத்திரம் என்று ஒன்று இருக்கும். அவரவர் பிறந்த மாதத்தில் வருகின்ற நட்சந்திர நாளில் அந்தந்த நட்சத்திரங்களுக்கு உகந்த ஆலயத்திற்கு குடும்பத்துடன் சென்று அபிஷேகம் செய்து, உங்கள் நட்சத்திரத்திற்கு ஏற்ற வஸ்திரத்தை சுவாமிக்கு சார்த்தி, மஞ்சள், குங்குமம், எண்ணெய், நெய் முதலியவற்றை வாங்கிக்கொடுத்து, முடிந்த அளவு அன்னதானம் செய்துவிட்டு வந்தால், உங்களுடைய நட்சத்திர தெய்வம், முழு யோகத்தையும் சுகத்தையும் உங்களுக்கு அருள்வார்.

## நட்சத்திரங்களுக்கு உரிய கோயில்கள் எவை எவை என்று பார்ப்போம்.

| | |
|---|---|
| அசுவினி | - திருத்துறைப்பூண்டி, மருந்தீஸ்வரர் கோவில் |
| பரணி | - நல்லாடை, அக்னீஸ்வரர் கோயில் |
| கார்த்திகை | - கஞ்சாநகரம், காத்ரசுந்த ரேஸ்வரர் கோயில், (பூம்புகார் அருகில்) |
| ரோகிணி | - காஞ்சிபுரம். பாண்டவதூதப் பெருமாள் கோயில் |
| மிருகசீரிஷம் | - எண்கண் - ஆதி நாராயணப் பெருமாள் கோவில் |
| திருவாதிரை | - அதிராம்பட்டிணம், அபய வரதீஸ்வரர் கோவில் |
| புனர்பூசம் | - வாணியம்பாடி, அதிதீஸ்வரர் கோவில் |
| பூசம் | - விளங்குளம் - அட்சயபுரீஸ்வரர் |
| ஆயில்யம் | - திருந்துதேவன்குடி - கற்கடேஸ்வரர் |
| மகம் | - ஒடுக்கம், தவசிமேடை மகாலிங்கேஸ்வரர் கோயில், (திண்டுக்கல் அருகில்) |
| பூரம் | - திருவரங்குளம், ஹரி தீர்த்தேஸ்வரர் கோயில் (புதுக்கோட்டை அருகில்) |
| உத்திரம் | - இடையாற்று மங்கலம் மாங்கல்யேஸ்வரர் கோயில் (லால்குடி அருகில்) |
| அஸ்தம் | - கோமல், கிருபா கூபேஸ்வரர் கோவில், |
| சித்திரை | - குரு வித்துறை, சித்திரரத வல்லப பெருமாள் கோயில் (மதுரை) |
| சுவாதி | - சித்துக்காடு, தாத்திரீஸ்வரர் கோயில் (தண்டரை அருகில், சென்னை) |
| விசாகம் | - பண்பொழி, திருமலை குமாரசாமி கோயில், (செங்கோட்டை அருகில்) |
| அனுஷம் | - திருநன்றியூர், மகாலட்சுமிபுரீஸ்வரர் கோயில், (மயிலாடுதுறை அருகில்) |
| கேட்டை | - பசுபதி கோவில், வரதராஜ பெருமாள் கோவில், (தஞ்சை அருகில்) |
| மூலம் | - மப்பேடு, சிங்கீஸ்வரர் கோவில் (சென்னை) |
| பூராடம் | - கடுவெளி, ஆகாசபுரீஸ்வரர் கோவில், (கல்லணை அருகில்) |
| உத்திராடம் | - கீழப்பூங்குடி, பிரம்மபுரீஸ்வரர் கோவில் (காரைக்குடி அருகில்) |

| | |
|---|---|
| திருவோணம் | - திருப்பாற்கடல் பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோவில் (வாலாஜா) |
| அவிட்டம் | - கீழக்கொருக்கை, பிரம்மஞானபுரீஸ்வரர் கோயில் (கும்பகோணம் அருகில்) |
| சதயம் | - திருப்புகலூர், அக்னிபுரீஸ்வரர் கோவில் (நன்னிலம் அருகில்) |
| பூரட்டாதி | - ரங்கநாதபுரம், திருவானேஸ்வரர் கோவில் (திருக்காட்டுப் பள்ளி அருகில்) |
| உத்திரட்டாதி | - தீயத்தூர் சகஸ்ர லட்சுமீஸ்வரர் கோயில் (ஆவுடையார் கோயில் அருகில்) |
| ரேவதி | - காருகுடி கைலாசநாதர் கோவில் (முசிறி அருகில்) |

நட்சத்திர தெய்வங்களை வணங்கி நன்மைகளை அடையுங்கள்!

~ ரா. பன்னீர்செல்வம்



# பன்னிரு திருமுறையும் பரிவுமிகு தாயுமானவரும்

திருஆலவாய் மற்றும் திருநல்லூர் பெருமணம் திருப்பதிகத்தின் நிறைவு செய்கிறார் ஞானசம்பந்த பெருமான்.

அப்பர் என்று அன்பொழுக அழைக்கப்பபெறும் திருநாவுக்கரசர்.
கூற்று ஆயினவாறு விலக்கலீர் எனத் தொடங்கும் பதிகத்தில் திருவதிகை வீரட்டம் திருத்தல ஈசனை பக்திசுவை நனி சொட்ட சொட்ட உருகி பாடியுள்ளார்! ஈசனருளால்

கல்லையே தெப்பமாக கொண்டு கடலூரில் கரையேறிய நாவுக்கரசர் கடலிடை பாடிய பதிகம் நமச்சிவாய பதிகம்!



சொற்றுணை வேதியன் சோதிவானவன்,
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப்பூட்டி ஓர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சிவாயவே!
என்று பாடி உருகுகிறார்

சுந்தரர், "பித்தா பிறைசூடி" என்று பாடிய தலம் திருவெண்ணெய் நல்லூர் ஞானசம்பந்தரை பாலைக்கொண்டு ஆட்கொண்டார் சர்வேஸ்வரன் ஓலைக் கொண்டு ஆட்கொண்டது சுந்தரரை தோழமை நெறி நாவுக்கரசரை சூலைக்கொண்டு ஆட் கொண்டார். மணிவாசகருக்கு காலைக்காட்டி ஆட் கொண்டார் ஈசன் ஞானசம்பந்தருக்கு ஈசனுக்கும் என்ன உறவு என்றால் தந்தை மகன் உறவு. தந்தை ஈசன் மகன் ஞானசம்பந்த பெருமான்.

திருநாவுக்கரசருக்கும், சிவ பெருமானுக்கும் என்ன உறவு எனில், திருநாவுக்கரசர் திருத்தொண்டர்! ஈசன் தலைவர், தலைவர் -தொண்டர் உறவு, சுந்தரருக்கும் சிவ பெருமானுக்கும் தோழமை உறவு, மணிவாசகருக்கும் சிவனுக்கும் என்ன உறவு என்றால் சிவபெருமான் ஆசிரியர் மணிவாசகப் பெருமான் மாணாக்கர்.

திருப்பெருந்துறையில் ஆவுடையார் கோவிலில் சிவனருள் பெற்றார்! திருவாசகம் என்னும் ஞானத் தேனை வழங்கியவர் திருவாதவூரார். திருமாளிகை தேவர், சேந்தனார், கருவூர் தேவர் போன்றோர்கள் சிவபெருமானை பாடி துதித்த அருளாளர்கள் பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தன் (அரசர்) வேணாட்டடிகள் திருவாலிய முதனார்
புருஷோத்த நம்பி சேதிராயர் (அரசர், திருமூலர் திருமந்திரம் அருளியுள்ளார்.

தொடரும்.....

# தை பொங்கல்

உத்தராயண புண்ணிய காலம் என்பது "தை" மாதம் தொடங்குகிறது. தைமாதப் பிறப்பு "பொங்கல்" திருநாளாகக்கொண்டாடப்பட்டு வருகிறது. உழவுத்தொழிலின் மேன் மையை உலகிற்கு உணர்த்துவதே பொங்கல் பண்டிகை.

தை மாதம் தொடங்குவதற்குள் அறுவடை எல்லாம் அநேகமாக முடிந்திருக்கும். அறுவடையான பொருட்களை வைத்து, அனைத்துயிர்களும் வாழ அருள் புரியும் பிரத்தியட்ச தெய்வமான சூரிய பகவானை வழிபடுவதே பொங்கல் பண்டிகையின் அடிப்படை கோட்பாடு.

**சூரியபூஜை:** காலையில் எழுந்ததும் நீராடி, அதாவது பொங்கலன்று தலைக்குக் குளிக்க வேண்டும்; எண்ணெய் நேய்த்துக் கொள்ள்கூடாது. அதன்பின் புதுப்பானையில் பொங்கல் வைக்க வேண்டும். புதுப்பொங்கல் பானையைக் கிழக்குப்பக்கமாக வைத்து, அதில் கிழங்குகளுடன் கூடிய மஞ்சள் - இஞ்சி இலைகளைக் கட்ட வேண்டும். பொங்கல் பானையின் வெளியே ஈரமான அரிசி மாவினால் சூரிய-சந்திர வடிவங்களை வரைந்து வைக்க வேண்டும். சிலர் அடுப்பைக்கூடப் புதிதாக வைப்பார்கள். பொங்கல் பொங்கி வழியும்போது, "பொங்கலோ பொங்கல்" எனப் பெருங்குரல் எடுத்துக் கூவுவார்கள். சில இடங்களில் பொங்கல் பொங்கி வழியும் திசையை வைத்து "நல்லதா? கெட்டதா?" எனத் தீர்மானிப்பார்கள். அது தவறு! பொங்கல் பானை வைக்கப்பட்ட இடம் /அடுப்பு சற்று சாய்வாக - மேடு பள்ளமாக இருக்கலாமல்லவா? ஆகவே பொங்கல் பொங்கி வழியும் திசையை வைத்துத் தீர்மானிக்கக் கூடாது. சமையல் முடிந்ததும் நைவேத்தியப் பொருட்களையும் வைத்து, சூரியபூஜை செய்யவேண்டும்.



சுருக்கமாகக் கணபதி பூஜையை முடித்துக்கொண்டு, அதன் பின்பே சூரியபூஜை செய்ய வேண்டும். பூஜை செய்யவேண்டிய இடத்தில்( திறந்த வெளியில்) அரிசி மாவால் அழ காகக் கோலமிட்டு, கோலத்தின் வடக்குப்பக்கம் சூரியனை யும் தெற்குப்பக்கம் சந்திரனையும் வரைந்து வைத்து (கோல மாகவும் போடலாம்) பூஜை செய்ய வேண்டும். ஒரு தலைவாழை இலையில் சமைத்து வைத்ததையெல்லாம் போட்டுப்பிசைந்து, அதிலிருந்து கொஞ்சம் எடுத்துகிழக்கு -மேற்கு -வடக்கு-தெற்கு என நான்கு திசைகளிலும் போடும் வழக்கமும் சில இடங்களில் உண்டு. அப்போதும் "பொங்கலோ பொங்கல்" எனக் கூவுவார்கள்.

(பொங்கலன்று பொங்கல்செய்த பானையையோ, சாதம் வடித்த பாத்திரத்தையோ காலி செய்யக்கூடாது)

~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்

# கணுப் பொங்கல்

பொங்கலுக்கு மறுநாள் செய்யப்படும் விசேஷ நிகழ்ச்சி இது. கணு என்ற சொல்லுக்கு "இரண்டை இணைப்பது" என்பது பொருள். கரும்பு, மூங்கில் ஆகியவற்றில் இரு பகுதிகளை இணைக்கும் பகுதியைக் "கணு" எனச் சொல்வது இந்த அடிப்படையிலேயே. பிறந்த வீட்டையும் புகுந்த வீட்டையு ம் ஒன்றாக இணைக்கும் முகமாகப் பெண்களால் கடைபிடிக்கப்படும் வைபவம் இது. இந்நிகழ்வின் போது, பொங்கல் பானையில் கட்டி வைக்கப் பட்டிருந்த மஞ்சள் கிழங்கை எடுத்து,வயதில் முதிர்ந்த ஐந்து சுமங்கலிகளிடம் கொடுத்து, கல்லில் இழைத்து தங்கள் நெற்றியில் தீற்றிக் கொள்வார் கள்; அல்லாத பட்சத்தில், கணவனிடமே மஞ்சளைத் தந்து தங்கள் நெற்றியில் தீற்றச் செய்வார்கள். கணுப்பிடி வைக்கும் முறை: இரண்டு மஞ்சள் இலைகள் அல்லது வாழை இலைகளை, நுனி கிழக்கு முகமாக இருக்கும்படியாக வைத்து, நதிக்கரையிலோ-திறந்த வெளியிலோ - (மொட்டைமாடியிலோ) கணுப்பிடியை வைப்பார்கள். கணுப்பிடி வைக்கும் இடத்தைக் கோலமிட்டு செம்மண் பூசி அழகு செய்வார்கள். முதல் நாள்(பொங்கலன்று) மீதமிருக்கும் சாதத்தில் மஞ்சள், குங்குமம் கலந்து- மஞ்சள், வெள்ளை, சிவப்பு எனப் பல வண்ணங்களில் தயார்செய்து கொள்வார் கள். சர்க்கரைப் பொங்கலைப் பழுப்பு நிறச் சாதமாக எடுத்துவைத்துக் கொள்வார்கள். ஒவ்வொரு வகை சாதத்தையும் ஏழு அல்லது ஒன்பது என ஒற்றைப்படை எண்ணிக்கையில் வரும்படியாக, இலைகளில் மூன்று வரிசைகளாக வைப்பார்கள். இவ்வாறு வைத்து முடித்ததும் தீபம் ஏற்றப்படும். வெற்றிலை-பாக்கு-பழம்-தேங்காய்-கரும்பு துண்டுகள்-மஞ்சள் (முனை முறியாத)அட்சதை- மலர்கள் ஆகியவை ஒரு தட்டிலும் மற்றொரு தட்டில் ஆரத்தியும் (மஞ்சள்-குங்குமம்- சுண்ணாம்பு கலந்து கரைத்த நீர்) தயாராக வைக்கப் பட்டிருக்கும். கணுப்பிடி வைக்கும் அதிகாலை நேரத்தில் ராகு காலம்-யம கண்டம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



**பூஜை:** கணுப்பிடியாக வைத்த சாத வகைகளுக்கு, அட்சதையும் மலர்களும் தூவி, "கணுப்பிடி வைத்தேன்; காக்கைப்பிடி வைத்தேன்; காக்கைக்கு எல்லாம் கல்யாணமாம் கல்யாணம்" என்று சொல்வார்கள். அதன்பின் தேங்காய் உடைத்து சூடம் ஏற்றி, கணுப்பிடி வைத்த இலைகளையும் சூரிய பகவானையும் வணங்கி, ஆரத்தி எடுப்பார்கள். கணுப்பிடிவைத்த சாதத்தை நாய்-பூனை போனறவை எச்சில் பண்ணாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.


கணுப்பிடி அன்று சமையலில் எலுமிச்சை சாதம், தேங்காய் சாதம், புளியஞ்சாதம், தயிர்சாதம் முதலான சாத வகைகளும்; அவியல் அல்லது கூட்டு, பாயசம், தேங்காய்த் துவையல், அப்பளம் முதலானவையும் இடம் பெறும்.

கணுப்பிடி வைத்த பெண்கள் அன்றிரவு சாப்பிட மாட்டார்கள் என்பது மரபு. இந்த நோன்பு உடன் பிறந்தவர்களின் நன்மைக்காகச் செய்யப்படுகிறது; "உடன் பிறந்தவர்கள் எந்தக்குறையும் இல்லாமல் நன்றாக இருக்க வேண்டும்" என வேண்டிக் கொள்வார்கள். இதன் உண்மையை, "கார்த்திகைஎண்ணெயும் கணுப்பழையதும் கூடப் பிறந்தவர்களுக்கு" என்னும் பழமொழி விளக்கும். கார்த்திகையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதும் பொங்கலன்று சமைத்த சாதத்தை - (பழையதை) மறுநாள் கணுப்பிடியாக வைப்பதும் உடன் பிறந்தவர்களின் நலனுக்காக - என்பதே இப்பழமொழியின் விளக்கம். பிறந்தவீட்டுச் சீராகப் பெண்களுக்குப்பணமோ/ஆடைகளோ பிறந்த வீட்டில் இருந்து வரும். உள்ளூரிலேயே இருப்பவர்கள் தாய் வீட்டிற்குப்போய் மதியம் உணவு உண்பது வழக்கம்.

~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்

# மாட்டுப் பொங்கல்

ஜல்லிக்கட்டு எனும் வீரவிளையாட்டு, பெரும்பாலான ஊர்களில் நடத்தப் படுகிறது. இந்த வீர விளையாட்டு நடப்பதற்கான காரணத்தை, நமது முன்னோர்கள் சுவாரசியமான ஒரு கதை மூலம் சொல்வார்கள்.



தை மாதம் பிறந்தது. பாடுபட்டு உழைத்துப் பலனைக்கண்ட உழவர், கரும்பும் நெல்லுமாகக் கொண்டுவந்து, முற்றத்தில் குவித்தார்; துண்டை உதறியபடியே மனைவியை அழைத்தார்; "நெல்லையும் கரும்பையும் பார்த்தாயா? எவ்..வளவு விளைச்சல்! எல்லாம் என் உழைப்பால் விளைந்தது!" என்று மிகவும் பெருமிதமாகக் கூறினார்.

அப்போது அருகிலிருந்த உழவரின் மாடு, எதற்காகவோ பலமாகத் தலையை ஆட்டியது. அதைப்பார்த்த உழவரின் மனைவி, "ஹுக்கும்! பார்க்க என்ன இருக்கிறது? நீங்கள் சொல்வதை உங்கள் மாடே ஒப்புக்கொள்ள வில்லை; அது தலையை ஆட்டுகிறது பாருங்கள்! இந்த விளைச்சல் எல்லாம் தன் உழைப்பால் வந்ததென்று சொல்கிறது அது" எனப்பரிகாசம் செய்தாள். உழவருக்குக் கோபம் வந்து விட்டது; "அதுவா? நானா? பார்த்து விடலாம் ஒரு கை" எனச்சொல்லிப்போட்டிபோடத தொடங்கினார். மாட்டுக்கும் மனிதருக்குமான போட்டி/வீர விளையாட்டு தொடங்கியது. இன்றுவரை நடந்து கொண்டிருக்கிறது. பெரும்பாலான நேரங்களில் மனிதன் வென்றாலும், பல சமயங்களில் தன் கொம்புகளால் குத்திக்கொன்று விடுகிறது மாடு. கர்ண பரம்பரையாகச் சொல்லப்படும் கதை இது.

மாட்டுப் பொங்கலின் அடிப்படை: பல விதங்களிலும் நமக்கு உதவிசெய்து, நம்மை வாழ வைக்கும் மாடுகளுக்கு நன்றி செலுத்தி, அவற்றைப்பெருமை படுத்துவதே மாட்டுப்பொங்கல். மாடுகளைத் துன்புறுத்தக் கூடாது; அவற்றிடம் நன்றியுடன் இருக்க வேண்டும்-என்பதைப் பற்றியெல்லாம்

நம் நூல்கள், காரண-காரியங்களுடன் விவரிக்கின்றன. பலவிதங்களிலும் மனிதனுக்காக உழைப்பது மாடு; உழவுத் தொழிலுக்கு உதவுவது; மேய்ச்சல் துறையில் புல்லை மேய்ந்து விட்டுப் பாலைத் தருகிறது; மனிதன் பிறந்தநாள் தொடங்கி, அவனுக்குப் பால்தந்து காப்பது மாடு; ஆகவே மாடுகளைத்துன்புறுத்தக் கூடாது - எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

மாட்டுப் பொங்கல் அன்று மாடுகளைக் குளிப்பாட்டி, அவற்றுக்கு சந்தனம்-குங்குமம் வைத்து, மாலையிட்டு அலங்காரம் செய்து கோ பூஜை செய்வார்கள். ஒரு தலைவாழை இலையில் சர்க்கரைப்பொங்கல், வெண்பொங்கல், கரும்புத்துண்டங்கள், வாழைப்பழங்கள் முதலானவைகளை வைத்து மாடுகளுக்கு விசேஷ விருந்து படைப்பார்கள். தமிழ்நாட்டிற்கே உரித்தான வீர விளையாட்டுகளில் ஜல்லிக்கட்டும் ஒன்று. இது கொல்லேறு தழுவுதல், மஞ்சு விரட்டு எனப்பல பெயர்களில் அழைக்கப் படுகிறது. அதைப்பற்றிய தகவல்கள்...



“இந்தக்காளையை அடக்குபவனுக்குத்தான் என் மகள் மாலையிடுவாள்” எனப் பெண்ணைப் பெற்றவர் சொல்ல, அவர் வீட்டுக்காளை சீறிப்பாய்ந்து கிளம்பும். விவரம் தெரிந்த நாள் முதல், பெண் ஒருத்தி ஒரு காளைக்கன்றைச் செல்லமாக வளர்த்து வருவாள்.அவளுக்கான திருமணப்பருவம் வரும்போது, கன்று வளர்ந்து காளை மாடாகிக் கொழுகொழுவென்று இருக்கும். அந்தப்பெண்ணைத் திருமணம் செய்ய விரும்புபவர்,காளை மாட்டை அடக்கி,அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். இந்தத் தகவலை “தூநிற வெள்ளை அடர்ந்தாற்கு உரியள் இப்பூவைப் புது மலராள்” எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

ஜல்லிக்கட்டு என்பது, வீரவிளையாட்டு மட்டுமல்ல. அதைப்பார்ப்பவர்களுக்கும் உற்சாகம் ஊட்டி வருவது, தற் காலத்தில் அனைவரும் அறிந்த ஒன்று. பத்திரிகைகளும் ஊடகங்களும் தகவல்களை அள்ளிக் கொட்டும் இக்காலத் தில், ஓரளவிற்காவது இத்தகவல்கள் தெரியும். மூதாதையர் கொண்டாடிய அபூர்வமான மாட்டுப்பொங்கலைப் பற்றிய தகவல்கள்... வருங்காலத் தலைமுறையினர் அறிந்து கொள்வதற்காக.

~ சொல்லின் செல்வர் PN பரசுராமன்



# ஜோதிடக் கதைகள்

# "இனம் இனத்தோடு சேரும்"

பண்டைய காலத்தில், விரும்பிய கலைகளை கற்றுத்தேர்ந்திட குருகுலங்களை நாடிச்செல்லும் வழக்கம் இருந்ததும் பெற்றோரை மறந்து, வீட்டைத்துறந்து சில ஆண்டுக்காலம் குருகுலத்திலேயே தங்கி கலைகளை கற்றுத் தேருவார்கள், அப்படி...

ஒரு கிராமத்தில் 15வயதை அடைந்த இரண்டு பேர், ஜோதிடக்கலையில் ஆர்வம் உள்ள அவர்கள், தொலைவில் உள்ள ஒரு குருகுலத்தில் ஜோதிடக்கலையைப் பயில, அங்கிருக்கும் ஒரு பண்டிதரிடம் செல்ல எண்ணி, பெற்றோர் ஆசியுடன் வழியனுப்பி வைக்கப்பட்டனர்.



இருவரும் குருகுலத்தை அடைந்தனர், அங்கிருந்த ஆசானான பண்டிதர், நாடே போற்றுகின்ற நல்லதோர் ஜோதிடர், ஜோதிடத்தில் உள்ள அனைத்து வகைகளிலும் தேர்ந்தவர் அவரிடம் மாணவனாக சேர, நான், நீ என்று பலரும் போட்டி போட்ட காலம் அது, அவர் ஒருவரை மாணவராக சேர்த்துக் கொள்கிறார் என்றால் நிச்சயம் அவன் ஜோதிடக்கலையில் பண்டிதனாக விளங்குவான் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

இந்த இருவரையும் அவர் மாணவராக ஏற்றுக் கொண்டதால் நிச்சயம் இவர்கள் எதிர்காலத்தில் ஜோதிட ஞானம் பெற்று சிறந்து விளங்குவார்கள் என்று அனைவரும் மகிழ்ந்தனர்.

குருகுலத்தில் ஆசான் பாடங்களைத் தொடங்கினார். அங்கிருந்த புதிய மாணவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரி பாடம், ஒர வஞ்சனையற்ற பயிற்சி அதே போல மாணவர்கள் எல்லோருமே ஆசான் சொல்வதை உன்னிப்பாக கவனித்து, ஜோதிடக் கலையைக் கற்றனர்.

பொறுமை, அமைதி, ஆழ்ந்த ஞானம், ஆராயும் தன்மை என அனைத்தும் அங்கே பயிற்றுவிக்கப்பட்டது.

ஜாதகம் வைத்து கணிப்பது, கைரேகை, பிரசன்னம் போன்ற பல நுணுக்கங்களைக் கற்று, இனி, தனித்தனியாக தங்களால் ஜோதிட பண்டிதராகத் திகழ முடியும் என்ற நம்பிக்கை அங்கிருந்த எல்லா மாணவர்களுக்கும் வந்தது.

அதாவது, அந்த மாணவர்களுக்கான பயிற்சிக்காலம் முடிந்தது, ஜோதிடக்கலை மட்டுமல்லாது, பல

பொதுவான நுண்ணியும் அங்கே, கற்பிக்கப்பட்டு, எல்லோருக்கும்.. ஆசான் வாழ்த்தும் அறிவுரையும் கூறி அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினார். மாணவர்கள் அனைவரும் தத்தம் ஊர்களுக்கு புறப்பட்டனர்

நாம் முதலில் குறிப்பிட்ட இரண்டு இளைஞர்களும் இனி நாமும் பண்டிதர்கள் தான் என்னும் பெருமையோடு ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அந்தக் காலத்தில் போக்குவரத்திற்கு வாகனங்கள் என்றால் குதிரை வண்டி, மாட்டு வண்டிகள் தான் அவை கூட செல்வந்தரிடத்தில்தான் இருக்கும். மற்றபடி, சாதாரண மாணவர்கள் நடைப் பயணமாகவே செல்வார்கள்.
இந்த இரண்டு இளைஞர்களுமே வழியில் ஒரு சத்திரத்தில் உணவருந்தி, ஒற்றையடிப் பாதையில் தங்கள் பயணத்தைக் தொடர்ந்தனர்.

அது நல்ல வெயில்காலம் என்பதால் இருவருக்குமே தாகம் ஏற்பட்டது, சற்று தூரம் வரையில் கிணறு எதுவும் தென்படவில்லை நடந்தனர். அதோ...சற்று தூரத்தில் சில குடிசைகள் தென்பட்டன, ஏதோ ஒரு சிற்றூரை நெருங்குகிறோம் என உணர்ந்து இருவரும் தெம்பாகி, சற்றே வேகமாக நடந்தனர், அந்த ஊரை நெருங்குமுன்னால் தனியாக ஒரு உறைகிணறு இருந்தது, அந்த ஊரிலிருந்து ஒரு பெண்மணி, மண்குடம் கயிறு ஆகியவற்றோடு கிணற்றை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அந்தப் பெண்மணியைப் பார்த்த மகிழ்ச்சியால் இருவரும் வேகமாக நெருங்கினார்கள்.

அந்தப் பெண்மணி குடத்தின் கழுத்தில் கயிரைக் கட்டி தண்ணீர் எடுக்க முற்பட்டதால் இருவரும் அந்தப் பெண்மணியை நெருங்கி அம்மா...குடிக்க தண்ணீர் தருவீர்களா நாங்கள் வெகுதூரத்திலிருந்து வருகிறோம், தாகம் தொண்டையை வறட்டுகிறது என்றனர்.

நீங்கள் யாரப்பா ? எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கு செல்லவேண்டும் ? என வினவினார்

இருவரும் தங்கள் ஆசானின் பெயரைச் சொல்லி நாங்கள் அவரிடம் குருகுலவாசம் செய்து, ஜோதிடத்தில் தேர்ச்சி பெற்று எங்கள் சொந்த ஊருக்கு செல்கிறோம் இனிமேல் தான் எங்கள் ஜோதிடத்தொழிலைத் துவக்க வேண்டும், என்றனர் இதைக்கேட்ட அந்தப் பெண்மணியின் முகத்தில் ஒருவித மார்ச்சி ஏற்பட்டதை இருவருமே கவனித்தனர், இதோ.. உங்களுக்கு நான் தண்ணீர் இறைத்துத் தருகிறேன் என்றான்.

அடுத்த இதழில் தொடரும்.....


Special Birthday Ritual Packages for You
Get 40% OFF
Call: 95660 00134

# சகல ஐஸ்வரியங்களையும் வழங்கும் ஸ்ரீ எந்திரம்

எந்திரங்களில் ராஜ எந்திரம் என்று அழைக்கப்படுவது ஸ்ரீ எந்திரம் ஆகும்.இது ஸ்ரீ திரிபுர சுந்தரி பகவதி அம்மனுக்கு உறித்தான எந்திரம் ஆகும். இந்த எந்திரத்தின் நடுவில் பிந்து என்று அழைக்கக் கூடிய சக்தி மையம் புள்ளி வடிவத்தில் அமைந்துள்ளது. இதில் நான்கு முக்கோணங்கள் மேலே உள்ள பிரபஞ்சத்தை சுட்டி காட்டுவதாக உள்ளது. இந்த நான்கு முக்கோணங்களும் சிவன் மற்றும் ஆண் தன்மையை குறிக்கக்கூடியது. ஐந்து முக்கோணங்கள் கீழ்நோக்கி வரையப்பட்டுள்ளது.
இந்த ஐந்து முக்கோணங்கள் பூமியையும், இவ்வுலக பற்றையும் குறிப்பதாகும். இந்த ஐந்து முக்கோணங்களும் அன்னை சக்தியை குறிப்பதாக அமைந்துள்ளது. இந்த ஒன்பது முக்கோணங்களும் ஒன்றை ஒன்று வெட்டிக்கொண்டு உள்ளது. இந்த அமைப்பு நவ யோனி சக்கரம் என்று அழைக்கப்படுகிறது.
இந்த ஸ்ரீ எந்திரம் ஆனது மகா மேரு என்றும் அழைக்கப்படுகிறது. ஸ்ரீ எந்திரத்தை முப்பரிமாணத்தில் வடிக்கும் பொழுது அது மகா மேரு மலையை போன்றதொரு அமைப்பை பெற்றிருப்பதால் இது மகாமேரு எந்திரம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஒன்பது முக்கோணங்களும் சேர்ந்து 43 சிறிய முக்கோணங்களை உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பு பிரபஞ்சம் மற்றும் உருவாக்குதலையும் குறிக்கிறது. இந்த அமைப்பை சுற்றி தாமரை மலரின் எட்டு இதழ்களும். இதற்கு அடுத்த அடுக்கில் பதினாறு இதழ்களும் அமைந்து, சகல ஐஸ்வர்யங்களையும் அருளும் மகாலட்சுமியின் அம்சமாக இந்த ஸ்ரீ சக்கரம் திகழ்கிறது.

"ஓம் ஐம் கிலீம் ஷ்ரீம் ஹிரீம் நமஹ "

எனும் மந்திரத்தை தினமும் ஸ்ரீ சக்கரம் தீப தூப ஆராதனையுடன், மல்லிகை மலர் கொண்டு 108 முறை மந்திர உச்சாடனம் செய்து வந்தால் தன நிலையை உயர்த்தி வீடு, வண்டி, சொத்து மற்றும் சகல ஐஸ்வர்யங்களையும் அடைய முடியும்.



~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# அரிய ஆன்மீக தகவல்

# மாதேஸ்வரன் மலை

தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிக்கு மிக அருகில் கர்நாடக மாநில மலைப்பகுதியாக விளங்குவது மாதேஸ்வரன் மலையாகும்.



வீரப்பன் வரலாற்றை அறிந்தவர்கள் அனைவரும் இந்த மாதேஸ்வரன் மலையில் உள்ள ஈசனை வீரப்பன் வழிபட்டதையும் அறிவார்கள்.

இங்குள்ள ஆலயத்தில் வீற்றிருக்கும் இறைவன் பெயர் மாதேஸ்வரன் மலை என பெயர் வந்ததாகத்தான் எல்லோரும் அறிவர், ஆனால், மாதேஸ்வரன் என்பது இறையம்சம் மிகுந்த ஒரு சிறுவனின் பெயர் என்பதும் அவனே சிவனாக - சிவலிங்கமாக மாறினான் என்பதே இன்றைய அரிய தகவலாகும்.

இதற்கு சான்றாய் உள்ளது, இங்குள்ள 14ம் நூற்றாண்டின் கல்வெட்டாகும். அந்த கல்வெட்டில் காணப்படுவது. பரமேஸ்வரனுக்கு பணிவிடைகள் செய்வதற்காக மாதேஸ்வரன் என்ற சிறுவன் வானுலகந்திலிருந்து பூமிக்கு அனுப்பி வைக்கப்பட்டான்,

அந்த சிறுவன் மாதேஸ்வரன் சித்தநஞ்ச தேசிகர் என்கிற ஒரு சித்த புருஷர் தன்னுடைய சீடனாக ஏற்றுக்கொண்டார். அவர், சுத்தூர் மாட சிம்மாசன மடம் என்ற மடத்தினை நடத்தி வந்தார், அந்த மடத்தில் மாதேஸ்வரனைப் போலவே பல சீடர்கள் இருந்தனர்.

அந்த சித்தர், மாதேஸ்வரனுக்கு சிவசக்தியின் அருளை பலவகையிலும் கற்றுக்கொடுத்து சிறந்த சிவபக்தனாக அவனை மாற்றினார்.

ஒருநாள் பூஜைக்கான பூக்களைப் பறித்து வர மாதேஸ்வரனையும் மற்றுமுள்ள சிறுவர்களையும் காட்டுக்கு அனுப்பி வைத்தார், பொழுதுசாயும் நேரத்தில் எல்லா சிறுவர்களும் திரும்பி வர, மாதேஸ்வரன் மட்டும் வராதது கண்டு குரு அதிர்ச்சியடைந்தார். சிறிது நேரத்தில் மாதேஸ்வரன் ஒரு புலியின் மீது அமர்ந்து அங்கு வந்து சேர்ந்தான், அவனுடைய பூக்குடலையில் பாம்பு, பூரான், தேள், பல்லி என பல ஜந்துக்கள் பூக்களுக்கு பதிலாக இருந்தன, இதனைப் பார்த்த சீடர்களும் குருவம் பயமும் பதட்டமும் அடைந்தனர். மாதேஸ்வரன் புலியிலிருந்து இறங்கி, அதன் தாடையை தடவிக்

கொடுக்க, புலி மாயமாய் மறைந்துவிட்டது அதே நேரத்தில் பூக்குடலையில் இருந்த ஜந்துகள் எல்லாம் மணம் வீசும் மலர்களாக மாறின.

மாதேஸ்வரனின் சித்து வேலையை பார்த்து அனைவரும் வியந்தனர். சிறுவனிடம் அவ்வப்போது பல மாற்றங்கள் நிகழ்ந்தன அப்போதெல்லாம் அவன் பல சித்து வேலைகளை செய்து காட்டினான்.



இவை அனைத்திற்கும் காரணம் சிவனின் அருள்தான் என்பதை உணர்ந்த குரு, இவனை மேலும் பண்படுத்தி மெருகேற்ற எண்ணினார்.

சிறுவனை குடகு மலையில் உள்ள பிரபுலிங்க மலையில் இருந்த தனது குருவான ஆதி கணேஷ்வரர் என்பவரிடம் அனுப்பி வைத்தார், அங்கு சென்ற மாதேஸ்வரன் தவம், யோகா யாகம் ஆகியவற்றை கற்றுத் தேர்ந்ததோடு பல சித்து வேலைகளிலும் சிறந்து விளங்கினான்.

அங்கு மாதேஸ்வரன் செய்த சித்து வேலைகள் மடத்தில் இருந்தோரை மட்டுமல்ல மடம் அமைந்திருந்த கிராமத்து மக்களையும் வியப்புறச் செய்தது அந்த கிராமத்து மக்கள் மாதேஸ்வரனிடம் வந்து அருள்வாக்கு கேட்டார்கள்.

ஒருவர் மலட்டு பசுஒன்றை கொண்டுவந்து காட்டி, இது பால் கறப்பதே இல்லை என்றார். மாதேஸ்வரன் அந்தப் பசுவை கைகளால் வருடிக் கொடுக்க, அந்த பசு தானாகவே பால் சொரிந்தது தனக்கு தீராத நோய் என்று ஒருவன் வர, அவனுக்கு வெறுங்கையால் விபூதி வரவழைத்துக் கொடுத்து நோயை நீக்கினான் மாதேஸ்வரன்.

இப்படியே பல ஆண்டுகள் கழிந்தன அந்த மலைகிராம மக்கள் மாதேஸ்வரனை தெய்வப் பிள்ளையாக பாவித்து வணங்குவதைக் கண்டு குருவான கணேஷ்வரர் அகமகிழ்ந்தார். தனது சீடனான மாதேஸ்வரன் மிகுந்த பக்குவமும் ஞானமும் அடைந்துவிட்டதால் அவனை பழையபடி மாதேஸ்வரன் மலையில் இருந்த பழைய குருவிடமே அனுப்பி வைத்தார்.

மாதேஸ்வரன் இந்த மலைப்பகுதியால் வந்து கால்வைத்ததுமே சிறு குன்றுகள், பாறைகள் இருந்த இடமெல்லாம் சமநிலங்களாயின எங்கும் பசுமை படர்ந்தது செழுமை செழுமை பார்க்கும் இடமெல்லாம் செழுமை படர்ந்தது.

அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் எல்லோருக்குமே மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். மாதேஸ்வரன் சொன்னதெல்லாம் அப்படியே நடந்தது, தொப்பிதல்லாம் துலங்கியது. மக்கள் மாதேஸ்வரனை தெய்வம் போலவே வணங்கத் தொடங்கினர்.

பசுமை படர்ந்த அந்த புல் தரையில் திடீரென்று தியானத்தில் அமர்ந்த மாதேஸ்வரன், அந்த நிலையிலேயே பன்னிரண்டு ஆண்டுகள் இருந்தான். திடீரென ஒருநாள் மாதேஸ்வரன் ஒரு சிவலிங்கமாக மாறினான். அவனது பக்தர்களும் மனமுருகி, அந்த சிவலிங்கத்தை மூலவராக அமைத்து கோவிலை உருவாக்கினர், ஒரு மனிதனே தெய்வமாய் மாறிய பேரதிசயம் அங்கே நிகழ்ந்தது.

அந்த மாதேஸ்வரன் மலையில் உள்ள இறைவனை வழிபடுவோர்க்கு இன்னல்கள் அகன்று இன்பங்கள் பெருகிக்கொண்டே உள்ளது. ஓம் நமசிவாய!

~ ரா. பன்னீர்செல்வம்



VOPEC
TURMERIC & BLACK PEPPER
HI-HEALTH FORMULA
Navel Chakra & Detoxifier
Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain,
heart and liver cells from ageing process
call: 95660 00134


உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்
www.priestservices.com
போன்: 95660 00134

# நரசிம்மருக்கும் பிரதோஷ பூஜை !

எல்லா சிவாலயங்களிலும் பிரதோஷ தினத்தன்று சிறப்பு பூஜைகளும் அபிஷேக ஆராதனைகளும் விமரிசையாக நடைபெறும். இந்த நாளில், சிவாலயம் சென்று பிரதோஷ தரிசனம் செய்வார்கள் பக்தர்கள். இதேபோல், நரசிம்மருக்கும் பிரதோஷ பூஜை உகந்தது. அந்த நாளில் நரசிம்மப் பெருமாளுக்கு சிறப்பு பூஜைகள், வழிபாடுகள் நடைபெறுகின்றன.



இரணியன் வித்தியாசமாக வரம் ஒன்றை வாங்கியிருந்தான். அதாவது என்னைக் கொல்லும் சக்தி மனிதருக்கும் இருக்கக் கூடாதுளூ மிருகத்துக்கும் இருக்கக் கூடாது என்று வரம் வாங்கியிருந்தான். அதனால்தான் மனித உடலும் சிங்க முகமும் கொண்டு அவதரித்தார் நரசிம்மர்.

அடுத்து, வீட்டுக்குள்ளேயும் கொல்லக் கூடாது. வெளியேயும் சாகடிக்கக் கூடாது எனும் வரத்தைக் கேட்டிருந்தான். அதனால்தான் இரணியனை வீட்டுக்குள்ளேயும் இல்லாமல், வெளியேயும் இல்லாமல், வாசலுக்குக் கொண்டுவந்து, மடியில் கிடத்தி சம்ஹரித்தார் பெருமாள்.

என்னைக் கொல்லும் நேரம் காலையாகவும் இருக்கக் கூடாது இரவாகவும் இருக்கக் கூடாது என்று வரம் வாங்கி ஆணவத்துடன் திரிந்தான். அதனால்தான் காலையும் இல்லாமல் இருளும் இல்லாத அந்திசாயும் வேளையாகப் பார்த்து, நரசிம்ம அவதாரம் நிகழ்ந்தது.

அப்படி நரசிம்ம அவதாரம் நிகழ்ந்தது... மாலை 4.30 முதல் 6 மணிக்குள்ளான நேரம் என்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள். இன்னும் குறிப்பாக சொல்லவேண்டுமெனில்... அவதரித்தது ஓர் பிரதோஷ நாளில் என்றும் சொல்வார்கள்.

ஆகவே, பிரதோஷ நாளின் போது, நரசிம்மர் குடிகொண்டிருக்கும் ஆலயங்களில் சிறப்பு பூஜைகளும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

"ஸத்யம் விதாதும்
நிஜப்ருத்ய பாஷிதம்
வ்யாப்திம் ச பூதேஷு
அகிலேஷு சாத்மன:
அத்ருஸ்யத அத்யத்புத
ரூபம் உத்வஹன்
ஸ்தம்பே ஸபாயாம்
நம்ருகம் ந மானுஷம்
நமோ நாரஸிம்ஹா"

தனது பக்தன் பிரகலாதனின் வார்த்தை ஸத்யம் என்று காட்ட மிருகமும் மனுஷ்யமும் அல்லாத அற்புதமான நரஸிம்ம ஸ்வாமி கம்பத்திலிருந்து வெளித்தோன்றினார். ஸ்ரீ நரசிம்மன் திருவடிகளில் சரணம்

~ முகநூலில் இருந்து

# மூலிகை ரகசியம்



## இன்சுலின் Plant (Chamaecostus cuspidatus)

இந்தப் பகுதியில் இன்று நாம் பார்க்கவிருக்கும் மூலிகை இன்சுலின் செடி என்பதாகும் பெயரைக் கேட்கும்போதே இது சர்க்கரை நோயை விரட்டும் ஒரு மூலிகைகயாகும்.

சாதாரணமாக மாடித்தோட்டத்தில் வளர்க்கும் விதத்தில் உள்ள செடி இது மாவிலை போல சற்றே நீளமாக இளம்பச்சை நிறத்தில் இதன் இலைகள் இருக்கும். இதனுடைய தண்டுப்பகுதி, கரும்பில் காணப்படுவது போல கணுக்களோடு காணப்படுகிறது. எந்தத் தன்மை கொண்ட மண்ணிலும் வளரக் கூடியது இந்த தாவரம்.



இந்த செடியின் இலைகளே மருந்தாகமாறி மாயம் செய்கின்றன. அமெரிக்காவை பிறப்பிடமாகம் கொண்ட இந்தத் தாவரம் இப்போது நம் நாட்டில் நிறைய அளவு பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

எல்லாத் தரப்பு மக்களுக்கும் அனைத்து வயதினருக்கும் சர்க்கரை நோய் வருவது இன்று சாதாரணமாக காணப்படுகிறது அதனால் இதன் பயன்பாடு மிகமிக அவசிய மாகிறது.

### பயன் படுத்தும் முறை

சர்க்கரை நோய் உள்ளவர்கள் காலையில் வெறும் வயிற்றில் இந்த செடியின் இரண்டு இலைகளை எடுத்து நன்றாக கழுவி சுத்தம் செய்து கொண்டு வாயில்போட்டு நன்றாக மென்று விழுங்க வேண்டும். சிறிதளவு புளிப்புச் சுவையோடு இருக்கும் இந்த இலைகள் சர்க்கரையின் அளவை வெகுவாக குறைக்கக் கூடியது எனவே தொடர்ச்சியாக சாப்பிடாமல் கவனமுடன் பயன்படுத்த வேண்டும்.

வருவானத்தின் குறிப்பிட்ட பகுதியை சர்க்கரை நோய்க்கு மாத்திரைகள் வாங்கவே ஒதுக்குகின்ற பலருக்கும் இந்த insulin plant ஒரு வரப்பிரசாதமாகும்.


தொட்டியில் வைத்து வளர்த்து, இதனை எளிமையாக பயன்படுத்தி சர்க்கரை நோயின் தீவிரத்திலிருந்து விடுபடலாம்.

இந்த மூலிகையை அனைவரும் பயன்படுத்தி நலமுடன் வாழ்வோம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# பேரின்பப் பெருவெள்ளம் பெருக

அருள் இருந்தால் பொருள் இல்லைளூ பொருள் இருந்தால் அருள் இல்லை. நடுநிலையில் மனது. மனதை இல்லுலக இன்பங்களை அனுபவிக்க இயக்கினால் சிற்றின்பம். சிற்றின்பம் செயல்பட சுக்கிரன், புதன் மற்றும் சனி இயங்க வேண்டும். மனதை மேலுலக இன்பங்களை அனுபவிக்க இயக்கினால் பேரின்பம். பேரின்பம் செயல்பட குரு, சூரியன் மற்றும் செவ்வாய் செயல்பட வேண்டும். சிற்றின்பத்தை திகட்டும் அளவிற்கு அடைய ராகுவும் பேரின்பத்தை திகட்டும் அளவிற்கு அடைய கேதுவும் துணை நிற்பார்கள். இப்பிறவியில் ஏதாவது ஒன்று கிடைக்கவில்லையே என வருந்த வேண்டியது இல்லை. எது கிடைக்கவில்லையோ அதற்கு இருமடங்காக கடவுள் வேறு ஒன்றை கண்டிப்பாக கொடுத்து இருப்பார். அது எதுவென்று அறிந்து கிடைத்தவற்றை வைத்து நிம்மதி அடையலாம்.





~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



# மேஷம்

- வேறு வீடுமாற்றிக் கொண்டு செல்லவும் வாய்ப்பு உள்ளது.
- சூரியபகவானின் நிலைகாரணமாகவும், சிலரிடம், பெரிய அளவிலான ஆன்மீக மற்றும் உலகவிஷயங்கள் தொடர்பானமாற்றங்கள் ஏற்படக்கூடும்.
- சுக்ரகிரகத்தின் சாதகமான நிலை காரணமாக, காதல் வாழ்க்கை மேம்படக் கூடும்.
- திருமணம் நடைபெறும் வாய்ப்பும் உள்ளது.
- 5 ஆம்வீட்டின் அதிபதியான சூரியன், டிசம்பர்மத்தியிலிருந்து 9 ஆம்வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். இதன்காரணமாக, காதல் விவகாரங்களில் அதிக அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கலாம்.
- சத்தான உணவு உட்கொள்வது, தினமும் ஏதாவது உடற் பயிற்சி செய்வது போன்றவை, வலுவாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க உதவும்.
- உடல் நிலையில் உரியகவனம் செலுத்துவது அவசியம்.
- மாணவர்களுக்கு, இக்காலகட்டம், மிகவும்பிரகாசமாக இருக்கும் என்று கூறமுடியாது.
- டிசம்பர் மாத மத்திய காலத்திற்குப் பிறகு, பள்ளி மாணவர்களின் நிலை மேம்படக் கூடும்
- செயல்களைக்குறிக்கும் செவ்வாய்கிரகம், மீனராசியில் சஞ்சரிக்கிறார். இதனால், சில தாற்காலிகப் பின்னடைவுகள் ஏற்படலாம்.
- வாழ்க்கைத் துணை அல்லது துணைவர் முக்கியத்துவம் பெறக்கூடும். அவருடன் உள்ள புரிந்துணர்வு வலுப்பெறக்கூடும்
- உணர்ச்சி வசப்படாமலும், பேராசைப் படாமலும், அமைதியாகவும், ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்வது நல்லது
- நிதிநிலையில் சில பிரச்சனைகள் எழலாம். குடும்ப செலவுகளும், சில தேவையற்ற செலவுகளும், இதற்கு முக்கிய காரணமாக இருக்கக் கூடும்

# ரிஷபம்



- ஊழ்வினை காரணமாக, ஏதேனும் விரும்பத்தகாத, பாதகமான விளைவுகள் திடீரென ஏற்பட்டாலும், அவற்றைக் கூட, சரி செய்து விடலாம்.
- சுக்கிர கிரகத்தின் சாதகமான தாக்கம் காரணமாக, காதல் போன்ற இனிய உணர்வுகள் மிகவும் மேம்பட்டிருக்கும்.
- மாதத்தின் முதல் பாதியில், 4 ஆம் வீட்டின் அதிபதியான சூரியன், 7 ஆம் வீட்டில் சஞ்சரிக்கிறார்.
- பணியில் இருப்பவர்களுக்கு, இது நல்ல காலம் எனலாம்.
- இன்னும் சிறப்பாகச் செயலாற்றும் உத்வேகம் கிடைக்கும்.
- குறிப்பிடத்தக்க ஆரோக்கியக் குறைபாடுகள் எதுவும் இன்றி, உடல்நிலை நன்றாகவே காணப்படுகிறது.
- உடலுக்கு ஏற்ற உணவுகள் உட்கொள்வதும், யோகா, உடற்பயிற்சி செய்வதும், சுறுசுறுப்பாக இருக்க உதவும்.
- மாணவர்களுக்கு இது, சவாலான காலகட்டமாக இருக்கக்கூடும்.
- புதன், சனி இருவரும், கல்வி முயற்சிகளுக்கு பொறுப்பேற்கும் கிரகங்கள் ஆவர்.
- உயர் கல்விக்கு உரிய கிரகமான சனி, குருவுடன் இணைந்திருக்கிறார். பல குழப்பங்களுக்கு இடையிலும், நல்ல வழிகாட்டுதல் கிடைக்கும்
- திருமணமானவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையிடம் நம்பிக்கையூட்டும் வகையிலும், அவர்களை ஈர்க்கும் வகையிலும் நடந்து கொள்வார்கள்.
- செலவினங்களையும், முதலீடுகளையும் கவனமாக ஆராய்ந்து, செலவுகளைக் கட்டுப்படுத்த புதிய வழிகள் குறித்து யோசித்தால், நிலைமையை நன்கு சமாளிக்க முடியும்.
- பணி தொடர்பாக, சிலர், பல பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இவற்றால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கவில்லை என்றால், வருத்தப்படக் கூடும்.



# மிதுனம்

- செவ்வாய்கிரகமும், சூரிய, சந்திர கிரகமும், தனிப்பட்ட வாழ்க்கையிலும், பணித்துறையிலும் நீடித்த மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும்.
- செவ்வாய் மற்றும் சுக்ரகிரகங்கள் , காதல் உணர்வுமிக்கவராகவும், கவர்ச்சிகரமாகவும் தோற்றமளிக்க வைத்து, முன்னிலைப்படுத்தக் கூடும்.
- சிலர் வாழ்க்கையில்,காதல் மலரும் வாய்ப்புள்ளது.
- கிரக அமைப்புக்களின் படி, சிலருக்குப் பணியிடத்திலும் வாழ்க்கைத் துணைவர்கள் கிடைக்கக் கூடும்.
- பணம் தொடர்பாக எந்த ஒரு பெரிய முடிவையும் எடுப்பதற்கு முன், எச்சரிக்கையாக இருக்கவும்.
- பணியில் இருப்பவர்கள், சில சாதகமான பலன்களை எதிர்பார்க்கலாம்.
- பணியில் சிந்தனையை வளப்படுத்தி, சிலருக்கு, உயர் பதவி அல்லது பொறுப்பில் ஒரு நல்லது ஏற்படுத்திக் கொடுக்கக் கூடும்.
- வேலை தொடர்பாக, அதிகமன அழுத்தம் ஏற்படக்கூடும்.
- யோகா, தியானம் செய்வதும், சாத்விக உணவு உட்கொள்வதும், விஷயத்தில்த் துணை புரியும்.முடிந்தால் மசாஜ், மன அழுத்தத்துக்கான சிகிச்சைகள் போன்றவற்றையும் மேற்கொள்ளலாம்.
- மேற்படிப்பைக் குறிக்கும் சனி கிரகம், ராசிக்கு 8 ஆம் வீட்டில் இருப்பது என்பது மிக நல்ல பலன்களைத் தராமல் போகலாம்.




# கடகம்

- அளவுக் கதிகமான சுதந்திரம் அபாயகரமானது என்பதையும்,
- சில நேரங்களில் பிறரது பேச்சைக் கேட்க வேண்டியிருக்கும், அறிவுரைக்காக மற்றவரை சார்ந்திருக்க வேண்டியிருக்கும், என்பதையெல்லாம் சிலர் உணரக்கூடும்.
- சுக்கிர கிரகம், 4 மற்றும் 5 ஆம் வீடுகளில் சஞ்சாரம் செய்வதால், உறவுகளை மேம்படுத்திக் கொள்ள முடியும்.
- திருமணமானவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையிடம் நம்பிக்கையூட்டும் வகையிலும், அவர்களை ஈர்க்கும் வகையிலும் நடந்து கொள்வார்கள்.
- சேர்க்கை, உறவுகளை மேம்படுத்துவதற்காகக் கடுமையாக உழைக்கத் தூண்டும்.
- செலவினங்களையும், முதலீடுகளையும் கவனமாக ஆராய்ந்து, செலவுகளைக் கட்டுப்படுத்த புதிய வழிகள் குறித்து யோசித்தால், நிலைமையை நன்கு சமாளிக்க முடியும்.
- நண்பர்களுக்கோ, உறவினர்களுக்கோ பணம் கடன் கொடுக்க நேர்ந்தால், எச்சரிக்கை தேவை. வேலையைப் பொறுத்தவரை, இதை ஒரு சிறந்த மாதம் என்று கூறமுடியாது அதே நேரம், இது ஒரு மோசமான மாதமாகவும் இருக்காது.
- வேலை முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய பயணங்களை மட்டும் மேற்கொள்ளுங்கள்;
- எந்த வித பெரிய நோய் நொடிகளும் இன்றி,
- ஆரோக்கியம் நன்றாகவே காணப்படுகிறது.
- எனினும், மாதத்தின் கடைசி இரண்டு வாரங்களில் சூரியன் தனுசு ராசிக்குள் இருப்பதால், கண் தொடர்பான சில கோளாறுகள் ஏற்படக்கூடும்.
- மருத்துவம், பொறியியல் மாணவர்களுக்கு இது நல்ல காலம் எனலாம்.
- கலை, படைப்பு போன்ற துறைகளில் இருப்பவர்களும், நன்மைகளை எதிர்பார்க்கலாம்.
- போட்டித் தேர்வுகளையும் நன்கு எழுதக்கூடும்



# சிம்மம்

- நிதி விஷயங்களிலும் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படக்கூடும்.
- வங்கிக் கடன் பெறும் எண்ணம் இருந்தாலோ, உள்ள கடன்களை அடைக்க நினைத்தாலோ, குரு பகவான் உதவி செய்வார் என எதிர்பார்க்கலாம்.
- சுக்கிரன், செவ்வாய் கிரகங்களின் தாக்கத்தினால், காதல் உணர்வுகள் அரும்பக்கூடும்.
- நீங்களோ அல்லது துணைவரோ, ஒருவருக்கொருவர், ஏதோ கடுமையான சொற்களைப் பயன்படுத்தி விடும் வாய்ப்புள்ளது. இது,
- குடும்ப வாழ்க்கையில், குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படக்கூடும்.
- பணம் கடன் கொடுக்கத் தயாராக இருங்கள். அத்துடன் கூட, அவர்கள் நிதிநிலையை சீர்செய்யும் நோக்கில் அவர்களுக்கு சில அறிவுரைகளைக் கொடுப்பதும் நல்லது.
- உயரதிகாரிகள் பணிக்கு உரிய அங்கீகாரம் அளிக்கக்கூடும்.
- சுக்கிர கிரகத்தின் அமைப்பு, சிலருக்காவது, வீட்டிலிருந்தே பணிபுரியும் வாய்ப்புகளை வழங்கக் கூடும்.
- சத்தான உணவை உட்கொள்வது, தினமும் உடற்பயிற்சி செய்வது போன்றவை,
- ஆசைகளும், கனவுகளும் அங்கீகரிக்கப்படாதது போலவும், கண்டனத்துக்கு உள்ளாவது போலவும் தோன்றலாம்.
- பாடங்கள், வீட்டுப்பாடங்கள் போன்றவற்றைத், தவறாமல் அவ்வப்பொழுது முடித்து விடுவதும் நல்லது.




# கன்னி

- மனநலம், உணர்வு பூர்வமான நல்வாழ்வு போன்றவற்றின் மீதும், இவர்கள் கவனம் செலுத்தக் கூடும்.
- பண விஷயங்கள் காத்திருக்கலாம், குடும்ப விஷயங்கள் காத்திருக்காது
- அனைவரும், சிரித்து, சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றும் விரும்புவீர்கள். இதுவே முக்கிய நோக்கமாக இருக்கக்கூடும்.
- சுக்கிரன் மற்றும் செவ்வாய் கிரகங்களின் இணைந்த தாக்கம், காதலையே ஒரு புதிர் போல மாற்றிவிடும் சாத்தியமும் உள்ளது.
- வாழ்க்கைத் துணைவரின் பெற்றோர் போன்றவர்களுடன் சில கருத்து வேறு பாடுகள் எழலாம்.
- பணத்தை எவ்வாறு முறையாகப் பயன்படுத்துவது, எவ்வாறு எதிர்காலத்திற்குச் சேமிப்பது போன்றவை குறித்து, மூத்தவர்களின் அறிவுரைக் கிடைக்கும்.
- வயதில் மூத்தவர்கள், பண விஷயங்களிலும், குடும்பத்தை நடத்துவதிலும் அனுபவம் வாய்ந்தவர்கள் ஆவர்.
- தொழில் நடவடிக்கைகளிலும், பயணங்களிலும் வெற்றி பெறுவதற்கு, போராட வேண்டியிருக்கலாம்.
- மன அழுத்தம், குடும்பத்தில் ஏற்படும் பதட்டம் காரணமாக, சிலருடைய ஆரோக்கியத்தில் பின்னடைவு ஏற்படலாம்.
- ஒருபுறம், கடுமையாக உழைக்க விரும்புவீர்கள் மறுபுறம், உடல், ஓய்வெடுத்துக் கொண்டு, உல்லாசப் பயணம் செல்லுமாறு கூறும்.
- பொறியியல் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வாய்ப்புள்ளது.
- தியானம் செய்வதும், பாடங்களில் ஒரு முகப்பட்ட கவனம் செலுத்துவதும், நல்ல பலன்களைத் தரும்.

# துலாம்



- நலம் விரும்புவோருடன், தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள உதவும்.
- காதல் வாழ்க்கை சிக்கலாக இருக்கக்கூடும்.
- சுக்கிரன் பணம், பொருள் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கச் செய்யக்கூடும்;
- காதலர் அல்லது துணைவர் மீது கொண்டுள்ள காதலை, ஆக்கபூர்வமாக வெளிப்படுத்துவதன் மூலம், நன்மை அடையலாம்.
- அழகிய கவிதை அல்லது உளப்பூர்வமான செய்தி ஒன்றே, மதிப்பை மேம்படுத்துவதற்குப் போதுமானதாகும்.
- துணைவருடன் கூட்டாக, தொழிலில் முதலீடு செய்வதற்கு, சிலர் மீது நிர்பந்தம் வரக்கூடும்.
- இது உடனடியாக லாபம் தராது என்பது தெரியும். வாழ்க்கைத் துணைவரை தொழில் கூட்டாளியாக ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில், எச்சரிக்கையாக இருக்கவும்.
- உடல்நிலையில் சிறியதொரு பின்னடைவு ஏற்படலாம்.
- ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து, ஆரோக்கியமாக வாழ்வதற்கான ஊக்கம் அளித்துக் கொள்ள வேண்டிய காலம் இது எனலாம்.
- கணவர் அல்லது மனைவியின் ஆரோக்கியமும் சிறப்பாக அமையாமல் போகலாம்.
- அன்பை விட சிறந்த மருந்து வேறு என்ன இருக்க முடியும்?
- மாணவர்களுக்கு இது நல்ல நேரமாக அமையக்கூடும்.
- சூரியன், குரு என்ற இரண்டு கிரகங்களும், சனி, புதன் கிரகங்களுடன் இணைந்திருப்பது தான் எனக் கருதலாம்.
- கல்வி முயற்சிகளில் முன்பிருந்த ஆர்வமின்மையும், விலகிவிடக் கூடும்.




# விருச்சிகம்

- செவ்வாய் கிரகம் வாழ்க்கையில் புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தரக் கூடும்.
- இதன் காரணமாக பிறருடன் பேசிப் பழகவும் விரும்பக்கூடும்.
- வாழ்க்கையில் மற்றவர்களை நோக்கி ஈர்க்கும் வகையில், பல சிறந்த திறன்களை சுக்ர கிரகம் வழங்கக்கூடும்.
- சுக்கிர, செவ்வாய் கிரகங்கள் காதல் உணர்வுகளைத் தூண்டி, அவற்றை அதிகரிக்கக்கூடும்.
- தங்கள் உடன்பிறப்புக்களுடன், கேளிக்கை, விருந்து போன்றவற்றில் கலந்து கொள்ளக் கூடும்.
- விற்பனை, பழைய தொழில் மூலம் வருமானம் ஈட்டவும் வாய்ப்புள்ளது. சிலருடைய குழந்தைகள்,
- பணியில் உள்ளவர்களுக்கு இது நல்ல காலம் எனலாம். பணியிடத்தில் பிறருடன், நன்கு பேசிப் பழகுவீர்கள்.
- எந்த வித சர்ச்சையிலும் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதும், ஆற்றலை வீணடிப்பவர்களிடமிருந்து விலகி இருப்பதும், நல்லது.
- எந்த விதக் கோளாறாக இருந்தாலும், அதை உடனடியாகப் பரிசோதித்துக் கொள்வது நல்லது.
- எண்ணெய் அதிகமுள்ள அல்லது காரசாரமான உணவுகளைத் தவிர்த்து, சத்துள்ள உணவை உட்கொள்வது நல்லது.
- குரு, செவ்வாய் கிரகங்களின் அமைப்பின் காரணமாக, மாணவர்கள், அவர்கள் கல்வி குறித்து, உடன்பிறப்புக்களுடன் கடும் வாக்குவாதத்தில் இறங்கும் வாய்ப்புள்ளது.
- படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.



# தனுசு

- முக்கிய கவனம், தோற்றம், ஆளுமை ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்வதில் இருக்கும் எனலாம்.
- ஆன்மிக நாட்டம் உள்ளவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, ஒரு பண்பட்ட, பூரண மனிதராக மலர உதவக் கூடும்.
- மிகவும் உகந்த வாழ்க்கைத் துணையைத் தேடும் முயற்சியில் நீங்களும் இறங்கக்கூடும்.
- மிகவும் ஏற்ற வாழ்க்கைத் துணையைக் கண்டறிய விரும்பினால், பேச்சு, செயல் என இரண்டிலும், பக்குவமாக நடந்து கொள்வது அவசியம்.
- பண விவகாரங்கள், அதாவது உள்ளகடன்கள், நிதி தொடர்பான பொறுப்புகள், மற்றும் செலவுகள், குறித்து அறிந்து கொள்ள, வாழ்க்கைத் துணைவர் விரும்பக்கூடும்.
- முயற்சிகளுக்கு உரிய அங்கீகாரமோ, பலனோ கிடைக்காமல் போகலாம்.
- ஆரோக்கியக் குறைபாடுகள் ஏற்படலாம் மருத்துவ பரிசோதனைகள் செய்து கொள்ள நேரலாம்.
- தவறாமல் உடற்பயிற்சி மற்றும் தியானம் செய்யவும் சத்தான உணவையும் உட்கொள்ளவும்.
- மாணவர்களுக்கு இது நல்ல காலம் எனலாம்.
- பள்ளி மாணவர்களும் சரி, கல்லூரி மாணவர்களும் சரி, இரவு பகலாக கடுமையாக உழைத்துப் படிக்க வேண்டியிருக்கும்.
- வேலை அனுபவம் பெற அவர்கள் விரும்பக்கூடும்.




# மகரம்

- கல்வி, குடும்பம், காதல் வாழ்க்கை, பண விவகாரங்கள் என எதுவாக இருந்தாலும் சரி, விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புள்ளது.
- ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொள்ளக்கூடும்.
- செவ்வாய் கிரகத்தின் அமைப்பு காரணமாக, கோபத்தால் விளையும் பிரச்சனைகள் சிலவற்றை சமாளிக்க வேண்டியிருக்கும்.
- உறவுகளை சுமுகமாகப் பராமரிக்க விரும்பினால், பேச்சிலும், செயலிலும், பக்குவமாக நடந்து கொள்வது முக்கியமாகும்.
- வீட்டுப் பெரியவர்கள், அலுவலக உயரதிகாரிகள் போன்றவர்களின் அறிவுரையைக் கேட்பது நல்லது.
- பதவி உயர்வுக்காகவும் காத்திருக்க வேண்டியிருக்கலாம். இதுவும் எரிச்சலூட்டலாம். பணியிடத்தில், மேலோட்டமான உறவுகள் முடிவுக்கு வந்து, உயர்பதவியில் உள்ளோர், சக ஊழியர்கள், கீழ் பணிபுரிபவர்கள் போன்றவர்களுடன் புதிய, நல்ல உறவுகள் ஏற்படலாம்.
- வேலைப் பளு, பதட்டம் காரணமாக, சிலருக்கு, மன அழுத்தம், தலைவலி போன்றவை ஏற்படலாம்.
- எளிய நடைமுறைகள் நீண்ட காலப் பயனளித்து, உடல்நிலையைச் சீராகப் பராமரிக்க உதவும்.
- மாணவர்களுக்குப் பொதுவாக, இது பயனுள்ள காலமாக இருக்கக் கூடும்.
- கல்விக் கடன் தொடர்பாகவும் சில பிரச்சனைகள் எழலாம்.
- தங்கள் பாடங்களில் தீவிர கவனம் செலுத்தி, படிப்பில் சிறந்து விளங்கக்கூடும்.
- மூத்தவர்கள், வேலைக்காக இவர்களைப் பரிந்துரை செய்யும் வாய்ப்பும் உள்ளது.



# கும்பம்

- வேலை தொடர்பான மாற்றங்களையும் எதிர்பார்க்கலாம்.
- மனரீதியாகவும், உணர்வுரீதியாகவும் பூட்டிவைத்துக் கொண்டிருக்கும் சிந்தனைகள், வெளிப்படக்கூடும்.
- கவனம், காதல் மீது இருக்கக்கூடும். ஆனால், செவ்வாய்கிரக அமைப்பின் காரணமாக, அளவுக்கு அதிக மானதுணிச்சலுடன் இருக்கக்கூடும்.
- சூரியனின் காரணமாக, ஆளுமையும், பிரகாசமும் பிறர் அறியுமாறு வெளிப்படக்கூடும்.
- பல நாட்களாகவராமல் இருந்த அவர்களது பணமும், கடவுள் அருளால், வந்து சேர்ந்து விடும் வாய்ப்புள்ளது.
- புதுவருடத்தில், வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயத்தை துவக்கலாம்.
- வங்கி அல்லது நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து சிலர் வாங்கியுள்ள கடனையும், அடைத்து விடக்கூடும்.
- எவ்வளவு விரும்புகிறீர்களோ, அவ்வளவு தூரம், வேலையில் உங்களால் முன்னேற்றம் காண முடியும் என்று கூடக்கூறலாம்.
- தகுதிக்கு ஏற்றதை எல்லாம், உரிமையுடன் கேட்டுப் பெறும் தைரியம் இருக்கும் எனலாம்.
- ஊதியஉயர்வு, வேலைப்பொறுப்பு போன்றவை குறித்தும் கூட, உயரதிகாரிகளிடம் பேசலாம்.
- உடற்பயிற்சி, தியானம், ஆரோக்கியமான உணவு போன்றவை, எதிர்காலத்தில் உடல் நிலையை நன்கு பராமரிக்க உதவும்.
- பிரச்சனை அதிகம் இன்றி, கல்விக் கடன்களும் கிடைக்கக்கூடும்.
- பிடித்த கல்வி நிறுவனம், பாடத்திட்டம் போன்றவற்றில் சேரவிரும்பும் மாணவர்களுக்கு அதிர்ஷ்டம் துணைநிற்கும்
- போட்டித் தேர்வுகள், அல்லது வேலை போன்றவையும் சிலருக்கு அதிர்ஷ்டகரமாக அமையலாம்.



# மீனம்

- எல்லாவற்றையும் நாம் தனி ஒருவராக இருந்து நடத்தி, முடித்துவிட முடியாது அதற்கு மற்றவர்களின் ஒத்துழைப்பு தேவை என்பதையும் புரிந்து கொள்ளக்கூடும்.
- உங்களுக்கான, மாதத்தின் பாடமாக அமையக்கூடும். காதல் வாழ்க்கை சரியான பாதையில் செல்லும் என்றாலும், செவ்வாய்கிரகத்தின் அமைப்பால், பொறாமை, கோபம் போன்றவற்றால் பிரச்சனைகள் எழலாம்.
- மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொள்வது அவசியம்.
- சிலருக்கு எதிர்காலம் குறித்த கவலைகளும் இருக்கக்கூடும்.,
- நிச்சயமில்லாத, ஆபத்தான முதலீடுகள் செய்வதோ, பிறருக்குப் பணம் கடன் கொடுப்பதோ நல்ல தல்ல.
- வேலையில் சுமாரான முன்னேற்றம் இருக்கக் கூடும்;
- அலுவலகத்தில் எந்தவித நன்மதிப்பைப் பெறுவதற்கும், அதிக முயற்சி செய்ய வேண்டியிருக்கும்.
- வேலை பளுகாரணமாக, சிலர், மன அழுத்தம், கழுத்துவலி போன்றவற்றால் பாதிக்கப்படலாம்.
- சிலர், அவர்கள் விரும்பும் கல்லூரி அல்லது கல்வி நிறுவனத்தில் சேர இயலாமல் போகலாம்.
- ஒவ்வொருவருக்கும், அவர்களுடைய கனவுகள் இருக்கும். அவற்றை நிறைவேற்றிக் கொள்வது, அவர்களின் ஆசையாக இருக்கும்.
- அதே நேரம் தீவிரமாகப் பணியாற்றியும் கூட, அங்கீகாரம் பெறுவதற்கு கடுமையாகப் போராட வேண்டியிருக்கலாம்.
- உடல் நிலை சீராகவே இருக்கக்கூடும். சில சாதாரண காரணங்களுக்காக, சிலருக்கு மருத்துவ ஆலோசனை அல்லது பரிசோதனை தேவைப்படலாம்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **95660 00134**